**CC.No.**76/2024
**Date**: 18.04.2026

**ம.சா. 1. ராஜ்குமார், த/பெ. சீனிவாசன், காரைக்குடி**
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை**

**1) நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் போட்டோ ஸ்டுடியோ வைத்துள்ளேன். எனது மாத வருமானம் என்ன என்றால் சுமார் 30 ஆயிரம். நான் என்ன தொழில் செய்கிறேன் என்று எனது சட்ட அறிவிப்பிலோ, புகாரிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். (தற்போது சாட்சி படித்துபார்த்துவிட்டு சொல்லவில்லை என்று சொல்கிறார். ) எதிரியை எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் சுமார் 4-5 ஆண்டுகளாக தெரியும் ய எவ்வாறு தெரியும் என்றால் என் நண்பர் குமார் மூலமாக எதிரியை தெரியும். முத்துராமன் என்ற நபரை எனக்கு தெரியுமா என்றால் நினைவில்லை. எதிரி எந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்றால் 05.12.2023 ல் பகல் 12.00 மணியளவில் கேட்டார். என்ன கிழமை என்றால் நினைவில்லை. செவ்வாய் கிழமை என்று சொன்னால் நினைவில்லை.**

**2) எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும் தொகை எவ்வளவு என்றால் ரூ.2 லட்சம் எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 24.12.2023 ல் கொடுத்தேன். மேற்படி தொகையை நான் வங்கியில் இருந்து எடுத்தேனா என்றால் கையில் சேமிப்பில் வைத்திருந்த தொகையை கொடுத்தேன். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. என் ஸ்டுடியோவின் பெயர் என்ன என்றால் வாசன் என்பதாகும்.**

ஸ்டுடியோவில் வரும் வருமானத்தில் நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. புகார்மனு, நிரூபண வாக்குமூலத்தில் எதிரி 3 மாதத்திற்குள் பணத்தை திருப்பி செலுத்துவதாக நான் சொல்லியுள்ள காலத்தை யார் நிர்னயித்தது என்றால் எதிரிதான் காசோலையை கொடுக்கும்போது சொன்னார். காசோலை தேதி என்ன என்றால் 24.03.2024. அன்று என்ன கிழமை என்றால் நினைவில்லை. அன்றைய தினம் ஞாயிற்று கிழமை என்றால் சரியல்ல. 24.03.2024 ஞாயிற்று கிழமை என்று தெரிந்து நான் காசோலையை பூர்த்தி செய்தேன் என்றால் சரியல்ல.

3) பொதுவாக காசோலையை வங்கியின் வேலை நாட்களில்தான் தேதியிட்டு கொடுக்கமுடியும் என்று சொன்னால் சரிதான். எதிரி ஆசிரியர் என்பதால் அவர் அவ்வாறு ஞாயிற்று கிழமை தேதியிட்டு காசோலையை கொடுக்க வாய்பு இல்லை என்று சொன்னால் தெரியவில்லை. ம.சா.ஆ.1 காசோலையில் உள்ள எழுத்துக்கள் ஒரே மாதிரியாக உள்ளது என்றால் சரிதான். எதிரி கையொப்பத்தில் உள்ள K முதல் எழுத்து காசோலையில் அவரது பெயருக்கு முன் உள்ள K என்ற முதல் எழுத்தும் வேறுபட்டு உள்ளது என்றால் சரிதான். மேற்படி காசோலையில் உள்ள மை வேறுபட்டு உள்ளது என்றால் தெரியவில்லை. எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ. 2 லட்ச தொகையை எந்த வகை நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன்.

4) எதிரிக்கு கொடுத்தாக சொல்லும் தொகையை கடனாக கொடுத்தேனா என்றால் கைமாற்றாக கொடுத்தேன். கைமாற்றாக கொடுத்ததாக என் புகார் மனுவில்

சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, கடனாக கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கடனாக வட்டிக்குதான் பணம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எத்தனை நபர்களுக்கு கடன் கொடுத்துள்ளேன் என்றால் வேறு யாருக்கும் பணம் கொடுக்கவில்லை. எங்கு வைத்து கடன் கொடுத்தேன் என்றால் எங்கள் வீட்டில் வைத்துதான் கொடுத்தேன். உடன் யார் இருந்தனர் என்றால் நாங்கள் இருவரும் மட்டும்தான் இருந்தோம். எதிரி கொடுத்தாக சொல்லும் காசோலையை எப்போது வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் நினைவில்லை. 24.03.2024 ம் தேதி மேற்படி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்று எனது புகார் மனு, நிரூபண வாக்குமூலம் மற்றும் சட்ட அறிவிப்பில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

5) வசூலுக்கு தாக்கல் செய்த காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் கையொப்பம் வேறுபாட்டால் திருப்பப்பட்டுள்ளது. சட்ட அறிவிப்பை எந்த எந்த முகவரிக்கு அனுப்பினேன் என்றால் எதிரியின் வீடு மற்றும் அலுலவக முகவரிக்கு அனுப்பினேன். புகார் மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் எதிரியின் அலுவலக முகவரியில் அறிவிப்பை பெற்றுகொண்டுள்ளார் என்று சொல்வதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் நினைவில்லை. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட விபரங்களை நான்தான் சொன்னேன் என்றால் நினைவில்லை. எதிரியின் வீட்டு முகவரிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு addressee absent என்று குறிப்பிட்டு திருப்பப்பட்டுள்ளது என்றால் நினைவில்லை. முத்துராமன் என்ற நபர் எனக்கும் எதிரிக்கும் நல்ல நண்பர் என்றால் இல்லை. அவர் மூலமாகத்தான் எதிரியை தெரியும்

என்றால் சரியல்ல.

6) எதிரி என்னிடம் எந்த வித பண பரிவர்த்தனையும் செய்யவில்லை என்றாலும், எதிரியின் நண்பர் முத்துராமன் என்பவரிடம் பணம் பரிவர்த்தனைக்காக கொடுத்த காசோலையைதான் நான் தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் ந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.18 18:23:24 +0530

நீதித்துறை நடுவர்,

விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)